Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி -20 | 06-11-2003 | வியாழக்கிழமை | ஓசை 261

தட்டச்சு தமிழ் ஆங்கிலம்

அனைத்து வேலைகளையும் ஒரே இடத்தில் உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

பகலவன்

# அவசர காலச் சட்டம் சனாதிபதியினால் பிரகடனம்

## பங்குச் சந்தை விலை வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாகப் பங்குச் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மேலும் சில தினங்களுக்குத் தொடருமானால் பொருளாதாரம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## நேற்றுக் காலை முதல் அமுல்

(கொழும்பு)

**நாட்டில் அவசர காலச்சட்டம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நேற்றுக் காலை முதல் பிரகடனப்படுத்தப்பட்டது. நேற்று முன்தினம் மூன்று அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்தபின்னர் அடுத்தபடியாக அவ்வவசரச்சட்டம் சனாதிபதியால் நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.**

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளைக் கருத்திற் கொண்டு சனாதிபதியால் இந்த அவசரகாலச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக சனாதிபதி செயலகம் நேற்று வெளியிடப்பட்டிருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி வரை இருந்த இந்த அவசரகாலச்சட்டம் நேற்றுமுதல் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதுநாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் முக்கியமானதொன்றான தாகக் கருதப்படுகிறது. சந்தேக நபர்களைப் பொலிசாரும் ஆயுதப் படையினரும் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்திருக்கும் அதிகாரத்தை இச்சட்டம் வழங்குகிறது.

இதேவேளை சனாதிபதி நாட்டில் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தியிருக்கின்ற போதிலும் பாராளுமன்றத்தில் தனது அரசு இயன்றளவு அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் தக்கவைத்திருப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## அவசர நிலைமையை சமாளிக்க பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு

### சனாதிபதியின் பணிப்பில் அமைப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்படக்கூடிய எந்தவொரு அவசர நிலைமையைச் சமாளிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளவென பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு ஒன்று சனாதிபதி சந்திரிகாவின் பணிப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் இந்திரடி சில்வாவினால் நேற்று இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயதிஸ்ஸதேரர் தலைமை தாங்கும் இக் குழுவில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்த விக்கிரமரட்ண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகிந்த வித்தியாராச்சி ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

அவசர நிலைமை ஏற்படும் காலத்தில் அதற்கான நடவடிக்கைகளை மாவட்ட மட்டத்தில் ஒன்றிணைக்கவும், உடனடி நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ளவும் உதவும் வகையில் இக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## பாதுகாப்பு விடயத்தில் சனாதிபதிக்கே மேலாண்மை சிறிலங்கா உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் சனாதிபதியே மேலாண்மை கொண்டவர் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித் திருக்கிறது.

இலங்கையின் பாதுகாப்பு உள்ளிட்ட பூரண நிறைவேற்று அதிகாரம் சனாதிபதிக்கே உரிமையாக்கப்பட்டுள்ளதோடு அவரைச் சார்ந்ததாகவும் இருக்கிறது. பாதுகாப்பு அமைச்சர் இதற் கமையவே செயற்படவேண்டியிருக்கிறதென உயர்நீதிமன்றம் அறிவித்திருக்கிறது.

சனாதிபதி சமர்ப்பித்த இரு கேள்விகள் தொடர்பாக உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பை நேற்று அறிவித்திருக்கிறது. அரசியல் யாப்பினூடாக சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முப்ப

(8ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றை மீண்டும் ஒத்திவைக்க சனாதிபதியிடம் பலம் இல்லை!

### அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்

இரண்டு வாரங்களின் பின்னர் மீண்டும் பாராளுமன்றத்தை சனாதிபதி ஒத்திவைப்பதாயின் ஒருமாத காலத்திற்கு ஒத்திவைக்க முடியும். ஆனால் இதற்குப் பாராளுமன்றத்தில் 113 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. இதை சனாதிபதியால் பெற்றுக்கொள்ள முடியாது என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். ஆகவே இந்த 15 நாட்கள் மட்டுமே சனாதிபதியால் பாராளுமன்றத்தை ஒத்திவைக்க முடியும். இதன் பின்னர் பாராளுமன்றத்தைக் கூட்டியே ஆக வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது நாம் எமது பலத்தை நிரூபிப்போம். இதன் பின்னர் சனாதிபதி இதன் மூன்று அமைச்சுக்களையும் மீண்டும் எம்மிடம் தர நேரும். அத்துடன் எல்லா அமைச்சுக்கும் நாம்தான் நிதி ஒதுக்கவேண்டியுள்ளது. அத்துடன் 123 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ஐ.தே. முன்னணிக்கு இருப்பதாகச் சபாநாயகருக்கு ' அறிவிக்கவுள்ளோம் என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

## ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கு 123 பாராளு. உறுப்பினர் ஆதரவு

(கொழும்பு)

123 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதாக வாக்களித்துள்ளனர். அவர்கள் இது தொடர்பாக அலரிமாளிகையில் பத்திரம் ஒன்றிலும் கையொப்பமிட்டுள்ளனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த உடன்பாடு தொடர்ந்து அமுலில் இருக்கும்

### - கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் அமுல் செய்வதென சனாதிபதி தீர்மானித்துள்ளார். நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் சனாதிபதியின் முடிவை அறிவித்தார்.

நாட்டில் யுத்தத்தை ஏற்படுத்தும் எண்ணம் சனாதிபதிக்குக் கிடையாதென அவர் மேலும் தெரிவித்தார். இது தொடர்பான அறிவிப்பைவிடுக்கும் அதிகாரத்தை சனாதிபதி தனக்கு தந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சனாதிபதியின் நடவடிக்கைக்கு ஜே.வி.பி. பூரண ஆதரவு

( கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புக்கருதி சனாதிபதி சந்திரிகா எடுத்துள்ள முடிவை முழுமையாக ஆதரிப்பதாகவும்,சனாதிபதி இன்னமும் பல விடயங்களில் நல்ல முறையில் செயற்படவேண்டியிருப்பதாகவும், இதனடிப்படையில் சனாதிபதிக்கு முழுமையான ஆதரவை வழங்குவுள்ளதாகவும் ஜே.வி.பி கூறுகிறது.

விடுதலைப்புலிகளின் திட்டவரைவானது தமிழீழத்தைக் கோருவதற்கான ஒரு நடவடிக்கையாகும். எனவேஇதனை சனாதிபதி ஏற்றுக் கொள்ளக்கூடாது.இலங்கை அரசு சமர்ப்பித்தவரைவைக் கொண்டே பேச்சுக்கள் நடத்த வேண்டும் தவிர

(8ஆம் பக்கம் பார்க்க)

## நாயாறு கடற்கரைப்பகுதியில் அழுகியநிலையில் ஆணின் சடலம்

(முல்லைத்தீவு)

நாயாறுகடற்கரைப்பகுதியில் நேற்று முன்தினம் இனம்தெரியாத ஆணின் சடலம் ஒன்று அழுகிய நிலையில் கரையொதுங்கியுள்ளது. இச்சடலத்தின் உள்ளங்கி சிவப்பு நிறத்துணியினாலும்,நீல நிறநீளக் காற்சட்டை அணியப்பட்டு காணப்படுகின்றது. வயது 25தொடக்கம் 30மதிக்கத்தக்கது. இச்சடலம் இன்னும் இனங்காணப்படவில்லை. இதுதொடர்பாக முல்லைத்தீவு காவல் பணிமனையால் தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. என்பதைத் தெரியப்படுத்தியுள்ளனர். அத்துடன் இது தொடர்பாக யாராவது உரிமை கோரினால் முல்லைத்தீவு காவல்துறையுடன் தொடர்பு கொள்ளும்படி முல்லைத்தீவு காவல் பணிமனைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

### - யாழ். சிறைச்சாலையில் -

## தண்ணீர் தொட்டியில் கைதியின் சடலம்

யாழ்.சிறைச்சாலை தண்ணீர் தொட்டியினுள் இருந்து கைதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்றையதினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த ம.யேசுதன் (வயது49)என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; கசிப்பு வழக்கு ஒன்றில் மாதசிறைத் தண்டனைக்காக யாழ்.சிறைச்சாலையில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் அரசாங்கத்தை த.கூட்டமைப்பு ஆதரிக்கும்

### - சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.தேசிய கட்சி அரசாங்கத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது முழு ஆதரவை அளிக்கத் தயாராய் உள்ளதாக அதன் தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.நேற்று முற்பகல் அலரிமாளிகையில் அமைச்சர் கரு ஜெயசூரியவுடனான பேச்சுக்களின் போதே இத்தகைய உறுதிமொழியை தமிழ் தேசியகூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் இதுசம்பந்தமான அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக அரசாங்கத்தினுடைய யோசனைகளுக்கு புலிகள் தமது

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விதை உழுந்து விற்பனைக்கு

நல்ல ரக விதை உழுந்து விற்பனைக்குண்டு. திருவையாறு விவசாயக் கூட்டுறவுச் சங்கம் கிளிநொச்சி. (3855)

Advancer Computing Institution ஊடாக hard ware wep design, programming போன்ற நவீன வகுப்புகளுடன் கணினி ஆசிரியர்களுக கான பயிற்சி வகுப்புகளும் 15.11.2003 ஆரம்பம். தொடர்புகட்கு திரு.கா. ஜீவலிங்கம் C.C.பாட சாலை அருகே, புதுக்குடியிருப்பு. (3726)

## காணவில்லை



சண்முகராஜா ஜெயராஜா

498/8 தருமபுரம்என்னும் முகவரி கொண்ட சண்முகராஜா ஜெயராஜா (மோகன்) என்று அழைக்கப்படும் ஆட்டோ சாரதி (ஜீவனின் தம்பி) 27-10-2003 அன்று NP. G.C. 4067 இலக்கமுடைய ஆட்டோவுடன் இவரைக் காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தரவும்.தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ச. ஜீவன்
498/8 தருமபுரம், பரந்தன்.

(சி-8695)

## கால்நடை செ.மு.சி.பயிற்சி நெறி

மேற்படி பயிற்சி நெறி பொலனறுவை அரசினர் பண்ணையில் ஒருமாத காலம் இலவசமாக நடைபெற இருப்பதால் இப்பயிற்சிக்கு ஏற்கனவே விண்ணப்பித்த வர்களும் விண்ணப்பிக்காதவர்களும் (ஆண்கள்) 10.11.2003 திங்கள் காலை 10.00 மணிக்கு எமது காரியால யத்திற்குச் சான்றிதழ்களுடன் சமூகம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திட்ட ஆலோசகர்,
காராளி,செ.மு.சி.நிலையம்,
முதன்மைச்சாலை,
155ஆம் கட்டை, கிளிநொச்சி.

(3854)

## புதிய கற்கைநெறி

(கண்டாவளை)

கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரி நிறுவனத்தில் தேசிய சான்றிதழ்களுக்கான கற்கைநெறி (N.E.C) நாளை மறுதினம் ஆரம்ப மாகின்றது. அத்துடன் கணினிக் கற்கை நெறியானது வரும் 12ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் இக் கற்கைநெறிக்குப் பெருமளவு மாண வர்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளதால் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களைக் குறிப்பிட்ட தினங் களில் தவறாது சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் தி.பிரபாகரன் அறிவித்துள்ளார். (14)

## பொது அறிவு போட்டி

முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று பிரதேசச் செயலர் பிரிவில் பாடசாலை மாணவர்களுக் கிடையேயான விழிப்புணர்வூட்டும் சுகாதார பொதுஅறிவுப் போட்டி நடைபெற்று வருகின்றது.

மேற்பிரிவில்A,Bகீழ்பிரிவில் A,Bஎன பிரிக்கப்பட்டே போட்டிகள் நடைபெற்றுவருவதாகவும் இப் போட்டிகளின் புள்ளிகள் அடிப் படையில் கோட்டமட்டத்திற்கான பரிசில்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (20)

## சிரமதானம்

இராணுவ நடவடிக்கை காரண மாக இடித்துச் சின்னாபின்னமாக் கப்பட்ட பச்சிலைப்பள்ளி-பளை அரசி னர் வைத்தியசாலை வளாகம் சிரம தானமூலம் துப்புரவு செய்யும் வேலை கள் இடம்பெறவுள்ளன.

இன்று பளைப்பிரதேச மக்கள், வைத்தியசாலை ஊழியர்கள் மற் றும் போராளிகளினால் மேற்படி வளாகம் சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்படுகிறது.

இன்று பிற்பகல் மேற்படி வளா கத்தில் வைத்து பளை வைத்திய சாலை அபிவிருத்திச் சபைப் பொதுக்கூட்டம் இடம் பெறுமென கிளி.மாவட்ட பிரதி மாகாண சுகா தார சேவைப் பணிப்பாளர் வைத்தி யக்கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (சோ)

- கிளி. மத்திய கல்லூரியில் கல்விகற்று -

## மாவீரரானோரின் பெயர்களை கல்லூரியில் பதிவுசெய்யக் கோரிக்கை

கிளி.மத்திய கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள பவளவிழா மலரில் எமது கல்லூரியில் கல்விகற்று தேச விடுதலைப்போரில் பங்குகொண்டு வீரகாவியமாகிய மாவீரர்களின் பெயர்ப்பட்டியலையும் சேர்த்துக்கொள்ளவுள்ளோம். தயவுசெய்து உரித்துடையோர் மேற்படி விபரங்களை 10.11.2003ஆம் திகதிக்கு முன (கல்லூரியில்) தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

## அம்பகாமம் அருள் மிகு மம்மில் பிள்ளையார் ஆலய உற்சவமூர்த்தி கும்பாபிஷேகமும் வருடாந்த சங்க அபிஷேக விழாவும்

07.11.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை உற்சவ மூர்த்தி கும்பாபிஷேகமும் பி.ப.1.30 மணி அளவில் வருடாந்த சங்காபிஷேகமும் நடைபெற்று இரவு என்பெருமான் வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும் என் பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

(3727) ஆலய பரிபாலன சபை

## M.A, M. Com.

### (காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை)

- ★ மேற்குறிப்பிடப்பட்ட பாடநெறிக்கு பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- ★ இப்பாடநெறிக்கு பட்டதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.
- ★ பதிவுகள் 01. 11. 2003இல் இருந்து ஏற்கப்படுகின்றன. இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பம். 06–12–2003
- ★ பதிவுகள் நேர அட்டவணைகள் தொடர்பான சகல விபரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விபரங்களுக்கு :-
யாழ்.இணைப்பாளர்
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(3853)

# வீர வணக்கம்

தாயின் மடியில் → 20 - 02 - 1972

தாயக மண்ணில் → 03 - 11 - 2003



இலட்சியத்தில் பற்றுக்கொண்டு
வரி வேங்கையாய் வரித்துக்
கொண்டவனே!
வரித்துவிட்ட கொள்கைதனில்
உறுதியாய் உயர்ந்தவனே!
காலச் சுழற்சிதனில்-பல
சாதனைகள் படைத்தவனே!
உனை நினைந்து ஏங்குகின்றோம்.

அதிகம் கதை பேசிடாத
மௌனமாய் ஓரிரு வார்த்தையால்
எமைக் கவர்ந்தவனே
எத்துயர் நேரினும்
உறுதியாய் உழைத்தவனே
உனை எண்ணித் தவிக்கின்றோம்.

அரும் சொத்தாகத் திகழ்ந்து
அதிக பொறுப்புக்களைச் சுமந்து
ஆடம்பரமின்றி-சாந்தமாய்
வீறுகொண்டவனே
தாய் மீதும்,விளையாடி மகிழ்ந்த
மண் மீதும் கொண்ட
ஆறாத பாசத்தால்-அங்கேயே
சங்கமித்து விட்டாயோ?


ஏற்க மறுக்கிறது-எம்
இதயம்-கனக்கிறது
விழி நீர் கசிகிறது,
ஆயினும் நீ நடந்த
வழித்தடங்கள் அகன்று விரிந்து
விடுதலை நதியுடன்-ஓராற்றில்
சங்கமமாகும் என்றெண்ணி
ஆறுதலடைகிறோம்.

## மேஜர்.அறிவுடைநம்பி/நந்தன்

(சுப்பிரமணியம்-லோகநந்தன்)
தம்பலகாமம்-திருகோணமலை
திருமலைக் கடற்பரப்பில் நீரில்மூழ்கிச் சாவடைந்தார்.

போராளிகள்,பணியாளர்கள்,
நிதிப்பிரிவு-அரசியல்துறை.
திரைப்பட வெளியீட்டுப் பிரிவு,
மின்வழங்கல் சேவை நிறுவனங்கள்.

(சி-8714)



ஸ்பெயின் நாட்டு இராஜதந்திரிகள் பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து ஈராக்கிலிருந்து வெளியேற உத்தேசித்துள்ள நிலையில் ஈராக்கிலுள்ள ஸ்பெயின் தூதரக வாயிலில் காவலில் இருக்கும் ஈராக்கிய பொலிசார்.

# இந்.இல் நக்சலைட்டுக்களை ஒழிக்க படைப் பிரிவு அமைப்பது பற்றி பரிசீலனை

(புதுடில்லி)


**நக்சலைட்டுக்களின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக தனியாக ஓர் படைப் பிரிவை ஏற்படுத்துவது பற்றி மத்தியரசு பரிசீலனை செய்து வருவதாக இந்திய துணைப்பிரதமர் அத்வானி கூறியுள்ளார்.**

பயங்கரவாதத்தையும் நக்சலைட்டுக்களையும் ஒடுக்க இரு முனை அணுகுமுறை தேவை.

இப்பிரச்சினைகளை சரியாகக் கவனிக்க கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறு உயர் பாதுகாப்பு அதிகாரியிடம் அவர் மேலும் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் டில்லியில் காவல்துறை தலைவர்களின் இரண்டு நாள் மாநாட்டை ஆரம்பித்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் மக்களின் துயர்களை உடனடியாகக்களையுமாறுமாநில அரசுகளைக்கேட்டுள்ளார். பாகிஸ்தானுடன் சமாதான முன் முயற்சிகளைப் பிரதமர் தொடர்ந்து மேற்கொள்வதும் குடியேற்ற மாநாட்டுடன் பேச்சுக்களை நடாத்தத் தம்மை அரசு நியமித்தது நிலைமையை இயல்பாக்கும் நோக்கத்திலானவை யென அத்வானி கூறியுள்ளார்.

எல்லை கடந்து நிகழும் பயங்கரவாதத்தைப் பாகிஸ்தான் நிறுத்தினால் அன்றி இயல்பு நிலைமை ஏற்படுத்த இயலாதென அவர்மேலும்கூறியுள்ளார். அத்துடன் பாகிஸ்தான் தனது நேர்மையை நிருபிக்க இந்தியா கோரியவாறு தேடப்பட்டுவருகின்ற 20 தீவிர வாதிகளை ஒப்படைக்க வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



ஈராக்கின் கர்பாலா நகரில் கடந்த 3ஆம் திகதி குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற பாரத விடுதி.

# காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தால் சட்டப்படியான ஐயம் எதுவும் இருக்காது

## அமெ. பிரதிநிதிகள் சபை உறுப்பினர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

காஷ்மீரில் இந்தியாவுடன் இணைந்தால் சட்டப்படியான ஐயம் எதுவும் இருக்காதென அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் பிரேங்ஸ் சலோன் கூறியுள்ளார்.

காஷ்மீரில் தான் ஆக்கிரமித்துக் கொண்ட பகுதியிலிருந்து வெளி யேறுமாறு பாகிஸ்தானை வற் புறுத்துமாறு 50. ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா ஐ.நா. சபை யிடம் கேட்டதெனக் கூறியுள் ளார். வாஷிங்டனில் கூட்ட மொன்றில் உரையாற்றிய சலோன் இதனைக் கூறியுள்ளார். அத் துடன் காஷ்மீரிலிருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ளுமாறும், சுயநிர்ணய உரிமை கருத்துக் கணிப்பை நடாத்துமாறும் இந்தியாவையும், பாகிஸ்தானையும் ஐ.நா. கேட்டுக் கொண்டதென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரு நாடுகளும் படைகளை விலக்கவில்லை. எனவே காஷ்மீரில் சுயநிர்ணய உரிமைக்கான வாக்கெடுப்பு தற்போது செல்லுபடியாகாதென ஐ. நா. நம்புவதாக அவர் கூறியுள்ளார். காஷ்மீரில் இம்முறை நடைபெற்ற தேர்தல்கள் வெளிப்படையானதும் நியாயமானவையெனவும் அவர் கூறியுள்ளார்.

# ரஷ்ய எண்ணெய் ஸ்தாபன தலைவர் சிறையிலிருந்தவாறு ராஜினாமா

(மொஸ்கோ)

ரஷ்யாவில் மிகப் பெரிய எண்ணெய் ஸ்தாபனமான யூக்கோச்சின் தலைவர் மிக்கைல் கொட்டாக்கோஸ்டி சிறையில் இருந்தவாறு ராஜினாமா செய்துள்ளார்.

அந்நாட்டில் மிகப்பெரிய பணக்காரரில் ஒருவரான இவர் ஊழல் மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவரது கைது ரஷ்ய அரசாங்கத்திற்கும் வர்த்தக சம்மேளனத்திற்குமிடையில் அதிகாரப் போராட்டத்தை வலுப்படுத்தியுள்ளது. டிசம்பரில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் நிலையில் தமது அரசியல் எதிராளிகளை ஆதரித்தமைக்காக ரஷ்ய அரசு இவரைச் சிறையில் வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக சட்டப் பேரவையிலிருந்து தி.மு.க.,பா.ம. கட்சியினர் வெளியேற்றம்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையிலிருந்து தி.மு.க. மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வெளியேற்றப்பட்டுள்ளனர்.



ஈராக்கில் அமெரிக்கக் கூட்டு வழங்கல் பகுதி தலைமைச்காரியாலயத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தும் வழங்கல் பகுதி ஊழியர்கள்.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இலவச மின்சாரம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த சிறப்புக்கவனயீர்ப்புத்தீர்மானத்திற்கு ஜெயலலிதா அளித்த பதில் தங்களுக்கு திருப்தி அளிக்கவில்லையெனக் கூறி தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்ய முற்பட்ட வேளை தி.மு.க. துணைத் தலைவர் துரைமுருகனின் வெளிநடப்பிற்கான காரணம் பேரவை பதிவேட்டில் இடம்பெறாதென பேரவைத் தலைவர் அறிவித்ததைக் கண்டித்து தி.மு.க. உறுப்பினர்கள் கோஷம் எழுப்பியுள்ளனர். தி.மு.க. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிப்பதாகக் கூறி அவர்களை வெளியேற்ற வேண்டுமென பேரவைத் தலைவர் உத்தரவிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன் தமிழகத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் தொடர வேண்டுமெனக் கூறி காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட்கட்சி, மாக்சிச கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையை சபையை விட்டு வெளிநடப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜிப்ரால்டாதீவு எல்லையை ஸ்பெயின் மீண்டும் திறந்தது

தமது நாட்டில் தென்பகுதியிலுள்ள ஜிப்ரால்டா தீவினுடனான எல்லையை ஸ்பெயின் அரசு நேற்று மீண்டும் திறந்துள்ளது.

வயிற்றுவலியால் அவதிப்படும் பயணிகளைக் கொண்ட பிரிட்டன் கப்பல் தீவைச்சார்ந்த கடற் பரப்பில் நங்கூரம் இட்டதைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை எல்லைகள் மூடப்பட்டிருந்தன. இக்கப்பலிலுள்ள பயணிகளுக்கு ஏற்பட்ட நோய் தமது நாட்டுப் பிரஜைகளுக்கும் தொற்றலாம் என்ற அச்சத்தினால் இந்நடவடிக்கையை எடுத்திருப்பதாக ஸ்பெயின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


ஸ்பெயினின் இந்நடவடிக்கை பிரிட்டனின் ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளது. ஸ்பெயினிலிருந்து பிரிட்டனின் முன்னாள் காலனித்துவ அமைப்பாக இருந்த ஜிப்ரால்டா தீவிற்கு ஆயிரக்கணக் கானோர் தொழிலுக்காகச் செல்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

# வடகொரியா, ஜப்பான் பிரதிநிதிகள் ஐ.நா. இல் ஒருவரையொருவர் சாடல்

(டோக்கியோ)

ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றிய வடகொரிய பிரதிநிதி ஜப்பான் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், முறையற்ற சொற்களை உபயோகித்துள்ளார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அவர் இதற்குப் பதிலளிக்கையில், தமது நாட்டை முறையற்றவாறு ஜப்பானிய ராஜதந்திரி கூறியமையாலேயே தானும் அவ்வாறு நடந்துகொள்ள நேரிட்டதெனக் கூறியுள்ளார். பொதுச்சபைத் தலைவர் இருதரப்பினருக்கும் விடுத்த வேண்டுகோளில் சபையில் கண்ணியமாக நடந்து கொள்ளுமாறு கேட்டுள்ளார்.



தென்கொரிய விமானப் படை சாகச நிகழ்ச்சியில் பங்கு கொள்ளும் தென்னாபிரிக்ககறுப்புக்கழுகு விமானங்களின் சாகசம்.


# பாக்தாத்தில் அமெ.சிப்பாய் பலி

(பாக்தாத்)

பாக்தாத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 03 மோட்டார் குண்டுத்தாக்குதலில் அமெரிக்க சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதே வேளை வடபகுதி நகரமான மோசூலில் அமெரிக்க இராணுவத்தினர் தங்கியிருந்த ஹோட்டல் ஒன்றில் 05 ராக்கெட் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'பொடோ' குறித்த மத்திய அரசின் புதிய ஆணை அரசியல் பழிவாங்கலைத் தடுக்க உதவுமா


வாஜ்பாய்


ஜெயலலிதா

செல்மன்

இந்தியாவில் கொண்டுவரப்பட்ட 'பொடோ' சட்டமானது அதன் செயற்பாடு குறித்து வாதப்பிரதிவாதங்களையும் சர்ச்சைகளையும் தோற்றுவித்துள்ளது.

'பொடோ' சட்டத்தை ஆளும் கட்சிகள் தமது அரசியல் பழிவாங்கல்களை மேற்கொள்ளப் பயன்படுத்துவதாகவும் இதனால் அரசியல் எதிரிகளை ஆளும் கட்சியினர் இலகுவாகக் குறிவைக்க முடிவதாகவும் எதிர்க்கட்சிகள் வலுவான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

இந்நிலையில் இந்திய மத்திய அரசானது 'பொடோ' பயங்கரவாத நடவடிக்கைகள் தடைச் சட்ட செயற்பாடுகள் குறித்து முக்கியமானதொரு ஆணை ஒன்றை அண்மையில் அறிவித்துள்ளது.

மத்திய மற்றும் மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ள பொடோ மறு பரிசீலனைக் குழுக்கள் இரண்டும் வழங்கும் தீர்ப்புக்கள் மாறுபட்டதாக இருப்பின் மத்திய அரசினால் அமைக்கப்பட்ட குழுவின் தீர்ப்பே இறுதியானது என்று அந்த புதிய ஆணை கூறுகிறது.

'பொடோ' சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவர்களின் கைது நடவடிக்கை தவறானது என அதை எதிர்த்து தாக்கல் செய்யப்படும் மனுக்களை விசாரிப்பதற்காக இந்திய மத்திய அரசு முன்னாள் நீதிபதி சகாரியா தலைமையில் ஏற்கனவே மறு பரிசீலனைக்குழு ஒன்றை அமைத்துள்ளது.

இவ்வாறான மனுக்களை விசாரிப்பதற்காக மாநில அரசுகளும் மறுபரிசீலனைக் குழுக்களை ஏற்கனவே அமைத்துள்ளன. இவற்றில் விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. ஆனால், மத்திய அரசு அறிவித்துள்ள புதிய ஆணையானது மாநிலங்களின் மறு ஆய்வுக் குழுக்களுக்கும் மாநில ஆளும் கட்சிகளுக்கும் விழுந்த அடியாகவே கொள்ள முடியும்.

மாநில அரசுகளால் பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அதை எதிர்த்து மனுத் தாக்கல் செய்தவர்களது விசாரணைகளிற்கான தீர்ப்புகள் மாநில ஆளும் அரசுகளுக்கு எதிராக அமைவதில்லை. இவை அரசியல் பழிவாங்கல்களாகவும், அரசியல் பின்னணியுடனான நடவடிக்கைகளாகவும் அமைந்துள்ளதால் ஆளும் மாநில அரசு எதிரணியின் மீள் பரிசீலனைக்கான விசாரணைகளை பக்கச்சார்பானதாகவே நடத்துவதாகக் குற்றச்சாட்டுக்கள் பலமாக எழுந்துள்ள நிலையில் மத்திய அரசினால் புதிய சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, மத்திய அரசின் மறு பரிசீலனைக்குழுவின் தீர்ப்பானது மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வாய்ந்ததாக இருக்கும் வகையில் மத்திய அரசு இந்த ஆணையைப் பிறப்பித்துள்ளது.

இந்த வகையில் பார்க்கும்போது மாநில அரசுகளின் பொடோ சட்டம் குறித்து மறு ஆய்வுக்கான விசாரணைகளில் மத்திய அரசிற்கு நம்பிக்கை இல்லை என்பதையே இது வெளிக்காட்டுகிறது. இதை மறுவழுமாகப் பார்க்கின் இவ்வாறானதொரு சட்டம் இல்லையெனில் மத்திய அரசு மறு ஆய்வுக் குழுவை அமைத்தும் பிரயோசனம் இல்லாத நிலையே காணப்படும். மத்திய அரசு தமது முடிவை நடைமுறைப்படுத்த முடியாத நிலையே காணப்படும் அல்லது இது மாநில அரசுகள் தமது அரசியல் எதிரிகளை பொடோ சட்டத்தைப் பயன்படுத்தி ஒடுக்க வாய்ப்பளிப்பதாகவே அமைந்துவிடும். ஆனால், மத்திய அரசின் தற்போதைய ஆணையானது மாநில அரசுகளின் மறு ஆய்வுக்குழுக்களை வலுவற்றதாக்கியுள்ளது. இந்நிலையானது, குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்து செல்வி ஜெயலலிதா தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் செயற்பாட்டிற்கு ஒரு பின்னடைவு என்று கூறலாம்.

தமிழக அரசினால் 'பொடோ' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ள அரசியல் வாதிகள் இப்புதிய சட்டத்தின் கீழ் விடுதலைபெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் மூலமும் ஜெயலலிதா அரசு அரசியல் களத்தில் பலமான எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனக் கூறலாம்.

கொள்கையளவில் ஒரு அமைப்பை ஆதரிப்பது தவறாகமாட்டாது என்ற நிலையில் மேடைகளில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்று குற்றம் சாட்டி 'பொடோ' சட்டத்தைப் பயன்படுத்தி வைகோ, நெடுமாறன் போன்ற தலைவர்களைக் கைது செய்து தமிழக அரசு சிறையிலடைத்துள்ளது. இவர்களது அரசியல் நடவடிக்கைகளை இதனூடாக முடக்க முற்பட்டுள்ள ஜெயலலிதா அரசிற்கு இவர்கள் விடுதலையாவதற்குச் சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளது சவால் நிறைந்த ஒன்றாகவே இருக்கப்போகிறது.

அது மட்டுமல்ல, பொடோ சட்ட அணுகுமுறை குறித்து தமிழக அரசின் நேர்மையற்ற போக்கையும் அரசியல் அபிலாசைகள் செல்வாக்குச் செலுத்தும் விசாரணைகளின் தன்மைகளையும்கூட மத்திய அரசின் புதிய ஆணை வெளிப்படுத்தி நிற்கின்றது என்று கூறலாம். அது மட்டுமல்ல, தமிழக அரசின் இவ்வாறான போக்குகளே மத்திய அரசை புதிய ஆணை ஒன்றுக்கு நிர்ப்பந்தித்திருக்கக்கூடும்.

இருந்தபோதிலும் மத்திய அரசு 'பொடோ' சட்ட மறு ஆய்வுக்குழு பற்றி வெளியிட்டுள்ள புதிய ஆணையானது 'பொடோ' சட்டத்தை வைத்து நடத்தப்படும் அரசியல், பிராந்திய அல்லது மாநில அரசியல் களத்திலிருந்து அகில இந்திய அல்லது மத்திய அரசியல் களத்திற்குத் தாவியுள்ளது என்று கூறினாலும் தவறில்லை.

இது ஒரு புறம் இருக்க, மத்திய அரசு பிறப்பித்த புதிய ஆணையை மறு ஆய்வு செய்யுமாறு மத்திய அரசை தமிழக அரசு கோரியுள்ளது. மேலும் தற்போது மத்திய அரசின் புதிய ஆணை குறித்த சட்ட சிக்கல்கள் பற்றியும் தமிழகத்தில் வாதப்பிரதிவாதங்கள் தீவிரம் பெற்றுவருகிறது.

அதாவது, தமிழக அரசினால் 'பொடோ' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவர் மத்திய அரசின் மறு ஆய்வுக்குழு விடம் விண்ணப்பித்து அதன் தீர்ப்பு வருவதற்கு முன்னர் தமிழக அரசினால் தொடுக்கப்பட்டுள்ள 'பொடோ' சட்டத்தின் கீழான வழக்கில் குற்றவாளியாக நீதிமன்று தீர்ப்பளிக்குமானால் நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதா, தாமதிப்பதா என்பதும் இந்நிலையில் 'பொடோ' சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட நபர் மீது வழக்குத் தொடர முடியாதென மத்திய அரசின் மறு ஆய்வுக்குழு தீர்ப்பளிக்குமாயின் எந்தத் தீர்ப்பை நடைமுறைப் படுத்துவது என்பதும் தற்போது தமிழகத்தில் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது.

# வீதி அருகேயுள்ள கட்டடங்களை அகற்ற ஆணையாளர் கோரிக்கை

வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் ஏ-9 வீதி துரிதமாக விஸ்தரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதனால் இப்பிரதேச எல்லைக்குட்பட்ட கனகராயன்குளம், புளியங்குளம், பெரியகுளம் ஆகிய பகுதிகளிலுள்ள வீதியின் மத்தியிலிருந்து 66 அடிக்கு உட்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள கட்டடங்கள் அனைத்தையும் அகற்றுமாறு கட்ட உரிமையாளர்களுக்கு வவுனியா வடக்குப் பிரதேச சபை விசேட ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## உலக உணவுத் திட்டத்தின் கீழ்

# கரைதுறைப்பற்றுப் பகுதியில் வீதிகள், பொது இடங்கள் புனரமைப்பு

(முள்ளியவளை)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் ஒழுங்குபடுத்தலில் கரைதுறைப்பற்றுப் பகுதிக்குள் பல வீதிகள், பொது இடங்கள் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி 'திட்டத்தின் கீழ் முள்ளியவளைப் பிரதேசசபை உப அலுவலகத்தின் ஒழுங்குபடுத்தலில் முள்ளியவளைப் பகுதியில் உள்ள வற்றாப்பளை ஞானமூர்த்தி ஆலய வீதி, பள்ள வெளி வீதி, வற்றாப்பளை 1ஆம் குறுக்குத்தெரு, வற்றாப்பளை 7ஆம் குறுக்குத்தெரு, முள்ளியவளை, செங்குந்த வீதி (பசீலன் வீதி), 4ஆம் குறுக்குத் தெரு, முள்ளியவளை நாவற்காடு பகுதியில் உள்ள இடுகாடு, சுடுகாடு, முள்ளியவளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வளாகம், முள்ளியவளை சென். திரேசா முன்பள்ளி வளாகம் ஆகிய இடங்களில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் மேற்படி புனரமைப்புகள் யாவும் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன் முடிக்கப்பட வேண்டியுள்ளதால் அப்பகுதி மக்கள் ஒவ்வொரு புனரமைப்பிலும் 75 பேருக்கு மேற்பட்டோர் கலந்து பங்களித்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. (ஆ)

# நியாப் செயற்திட்டம் 2ஆம் கட்டத்தை நடைமுறைப்படுத்த உலக வங்கி அனுமதி

## நிகழ்ச்சித் திட்ட அதிகாரி வன்னியகுலம்

வடக்கு-கிழக்கு மாகாண நீர்ப்பாசன விவசாய (நியாப்) செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உலக வங்கி அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நியாப்பின் முதலாவது செயற்திட்டம் 2000ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் முடிவுக்கு வருகின்றது.

நியாப்பின் இரண்டாவது கட்டத்தின் கீழ் மேலும் 500 மையக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

முதலாவது நியாப் திட்டம் 2005 ஆம் ஆண்டு நிறைவடைவதைத் தொடர்ந்து ஆரம்பமாகும் இரண்டாவது நியாப் திட்டம், வடக்கு-கிழக்கு மாகாணத்தின் சமூக, பொருளாதாரக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு உந்து சக்தியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக நியாப் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி சி. வன்னியகுலத்தின் செய்திக் குறிப்பு கூறுகின்றது.

முதலாவது நியாப் திட்டத்தின் நம்பிக்கையான முன்னேற்றமும் திருப்திகரமானது எனும் அடிப்படையிலேயே இரண்டாவது நியாப் திட்டத்தைப் பாரிய முதலீட்டையும் வேலைத் திட்டங்களையும் உள்ளடக்கியதாக உலக வங்கி அனுமதி வழங்கியுள்ளது என்றும் அறிக்கை கூறுகின்றது.

இரண்டாவது நியாப் திட்டம் பற்றிய கொள்கை உருவாக்கம், திட்ட இனங்காணல், திட்ட அமுலாக்கல் பற்றிய இரண்டு நாள் வேலை திட்டப்பட்டறை நவம்பர் 7,8ஆம் திகதிகளில் அநுராதபுரம் நுவரெவேவ இடங்களில் நடைபெறவுள்ளது.

இதில் உலக வங்கி அதிகாரிகள், அமைச்சுச் செயலாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மாகாண, மாவட்ட அரச அதிகாரிகள் பங்குபற்றவுள்ளார்கள்.

# கண்ணிவெடி அகற்றும் பணி முல்லை.யிலும் நடைபெறுகிறது

முல்லைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் புதைக்கப்பட்ட வெடிபொருட்கள், எறிகணை, விமானக் குண்டுவீச்சினால் புதையுண்டிருந்த வெடிபொருட்கள் மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டு வருகின்றது.

1996ஆம் ஆண்டு முல்லை மண் மீட்கப்பட்டு, மிதிவெடிகள் அகற்றப்பட்டு வந்தது. இருந்தும் தற்போது முல்லை மாவட்டம் கட்டம்-I வைத்தியசாலை வளாகம் பின்பகுதி, முல்லைத்தீவு பொது மயானம் ஆகிய இடங்களில் தற்போது கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றது. தொடர்ந்து ஒரு மாதகாலம் இப்பணி இங்கு நடைபெறும் எனவும் மக்கள் மிதிவெடிகள் இருப்பதாக சந்தேகப்படும் இடங்களைத் தம்மிடம் தெரிவிக்கும்படியும் மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினர் தெரிவித்தனர். (20)



# நெல் விளைச்சலை அதிகரிப்பதற்கு சில யோசனைகள்

நெல் இனத்தின் வயதை அடிப்படையாகக்கொண்டு நெற்செய்கையில் விளைச்சலை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும். இதுகுறித்து ஆலோசனைகளை முன்வைத்துள்ளார் யு.என்.எச்.சி.ஆர். வெளிக்கள உத்தியோகத்தரான எஸ். சத்தியசீலன்.

கேள்வி:-தற்போது ''யாழ் -வன்னிப்பெருநிலப்பரப்புக்களில் மேற்கொள்ளப் பெற்றுவரும் பெரும்போக நெற்செய்கையில் சிறந்த நெல்விளைச்சலினைப் பெறுவதற்கு விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து தெரிவிக்க முடியுமா?

பதில்:- ஆம்! குறிப்பாக பெரும் போக நெற் செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகள் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்வதன் மூலம் அதிகரித்த நெல்விளைச்சலினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பொதுவாக எல்லா வகை நெல்லினங்களினதும் வாழ்க்கைக் காலத்தை பதியவளர்ச்சிக்காலம் (முளைத்ததில் இருந்து குடலை உருவாக்கம் வரை) இனப் பெருக்கக்காலம் (குடலையின் உருவாக்கத்தில் இருந்து கதிர் வெளித்தள்ளப்படல் வரை) முதிர்ச்சிக்காலம் (கதிர் வெளித்தள்ளப் பட்டதில் இருந்து அறுவடை வரை) என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். இவற்றிலே எந்த ஒரு நெல்லினமும் எமது காலநிலை நிலைமைகளில் தமது இனப்பெருக்கக் காலம் முதிர்ச்சிக்காலம் என்பவற்றுக்கு தனித் தனியாக ஒவ்வொரு மாத காலத்தை எடுத்துக் கொள்கின்றன. எனவே இப்பயிரின் மொத்த வளர்ச்சிக் காலத்தில் அவற்றின் பதியவளர்ச்சிக் காலமே வேறுபட்ட இனங்களுடன் மாறுபடக் கூடியதொன்றாகும்.பதியவளர்ச்சிக் காலத்தில் கிட்டத்தட்ட முளைத்ததில் இருந்து 25 நாட்கள் அளவில் அதாவது நெற்பயிர் தனது 5 ஆவது இலையைத் தோற்றுவிக்கும் போதே நெல் விளைவைத் தீர்மானிக்கும் காரணிகளில் முக்கியமானதொன்றாகிய மட்டங்கள் தோன்றுதல் ஆரம்பமாகின்றது.

மூன்று, மூன்றரை மாத வயதுடைய நெல்லினங்களை எடுத்துக் கொண்டால் அவற்றின் பதியவளர்ச்சிக் காலம் 30-45 நாட்கள் வரையிலானதாகவே இருக்கும். ஆனால் 25 நாட்கள் அளவிலேயே மட்டங்கள் தோன்ற ஆரம்பிப்பதனால் இவ்வினப் பயிர்களினால் தோற்றுவிக்கப்படும் மட்டங்களில் இருந்து அவற்றின் விளைவுக் காலத்தினுள் வினைத்திறனான கதிர்களைத் தோற்றுவிக்க முடியாது. ஏனெனில் குறித்தளவு எண்ணிக்கையான மட்டங்கள் தோற்றுவிக்கப்பட முன்னர் பயிர்,பயிர் இனப்பெருக்க வளர்ச்சி நிலையை (குடலை உருவாக்கம்) அடைந்துவிடுகின்றது. இதன் காரணமாக குறுகிய கால நெல் இனங்களை செய்கைபண்ணும் போது நாற்றுநடுகை முறையைப் பயன்படுத்துவது ஒரு பிரியோசனமற்ற செயலாகும். எனவே இந்த இனங்களுக்கு நெருங்கிய விதைப்பினை வேற்கொண்டு குறித்த நிலப்பரப்பில் உள்ள பயிர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் உயர் விளைவை எதிர்பார்க்கமுடியும். அத்துடன் மொட்டைக் கறுப்பன், பச்சைப்பெருமாள்,பெரியவெள்ளை போன்ற யாழ் -வன்னிவாழ் விவசாயிகளால் பரம்பரை பரம்பரையாக விரும்பி செய்கைபண்ணப்படுகின்றன. பெரும்பாலான நீண்டகால வயதுடைய பழைய நெல்லினங்கள் பரம்பரை, பரம்பரையியல் ரீதியாகவே மட்டங்களைத் தோற்றுவிக்கும் ஆற்றல் குன்றியனவாகக் காணப்படுகின்றன.

கேள்வி:- இதற்கு எவ்வாறான நடைமுறையினைப் பின்பற்றி நெல்விளைவினை அதிகரிக்க முடியும் என்பது பற்றி கூறுவீர்களா?

பதில்:- அதாவது நான்கு அல்லது நான்கிற்கு மேற்பட்ட மாத வயதுடைய நெல்லினங்களைப் பொறுத்த மட்டில், இவை குறிப்பிடத்தக்களவு பதியவளர்ச்சிக் காலத்தைக் கொண்டுள்ளதால் (2 மாதத்திற்கு அதிகமான பதிய வளர்ச்சிக்காலம்) முதிர்ச்சிக் காலத்தினுள் இவற்றினால் குறிப்பிடத்தக்களவு வினைத்திறனான கதிர்களைத் தோற்றுவிக்கக் கூடிய ஆற்றல் உள்ள மட்டங்களை உருவாக்க முடியும்.

இக் காரணத்தினால் இவ் இனங்களுக்கு குறுகிய கால இனங்களைப் போன்று நெருங்கிய விதைப்பினை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அத்துடன் நாற்று நடுகையை மேற்கொள்வதற்கும் இவை மிகப் பொருத்தமான இனங்களாகும்.

**இடப்படவேண்டிய வளமாக்கியின் அளவு (kg பரப்பு)**

| நெல்லின வயதுப் பிரிவு (மாதங்கள்) | 1ஆம் மேற்கட்டு வளமாக்கி | 2ஆம் மேற்கட்டு வளமாக்கி | 3ஆம் மேற்கட்டு வளமாக்கி | 4ஆம் மேற்கட்டுவளமாக்கி |
|---|---|---|---|---|
| 3-3 | யூரியா2kg 15 நாட்கள் அளவில் | ரீ-டி.எம்.2kg 25-30 நாட்கள் அளவில் | — | — |
| 4-4 | யூரியா 1.5kg 15-20நாட்கள் அளவில் | யூரியா 0.75 kg 35-40 நாட்கள்அளவில் | ரீ-டி.எம்.2kg 55-60 நாட்கள் அளவில் | — |
| 5-5 | யூரியா 1.5kg 15-20 நாட்கள்அளவில் | யூரியா0.75 kg 35-40 நாட்கள்அளவில் | யூரியா 0.75 kg 60-65 நாட்கள்அளவில் | ரீ.டி.எம்.2kg 85-90 நாட்கள் அளவில் |

கேள்வி:-நெற்பயிர்களுக்கான வளமாக்கி (பசளை) பிரயோகங்கள் பற்றிக் கூற முடியுமா?

பதில்:- நெற்பயிர்களுக்கான வளமாக்கிப் பிரயோகத்தினை எடுத்து நோக்கினால், நைதரசன், பொஸ்பரன், பொட்டாசியம் என்பன முக்கியமான போசனைக் கூறுகளாகும். எனவே நெல்விதைக்கும் போது அடிக்கட்டுப்பசளையாக இடப்படும்.

நெற்கலவை **(v-mixture)** பொஸ்பரஸ், நைதரசன், பொட்டாசியம், என்பவற்றைப் பயிரின் ஆரம்ப வளர்ச்சிக்கு வழங்குகின்றது. இதில் குறிப்பாக பொஸ்பரஸ் ஆனது அதிகளவில் இருப்பதுடன் பயிரில் அதிகளவு தொழிற்படு வேர்களின் உருவாக்கத்தைத் தூண்டுகிறது. இது மண்ணில் இருந்தான போசனைக் கூறுகளின் சீரான அகத்துறிஞ்சலுக்கு உதவுவதனால் பயிர்வளர்ச்சிக்கும் விருத்திக்கும் அத்தியாவசியமானதொன்றாகும். பொதுவாக பொஸ்பரசின் கரைதிறன் குறைவாக இருப்பதனால் விதைப்பின் போது இடப்படும் பொஸ்பரசினை பயிரினால் உடனடியாக அகத்துறிஞ்ச முடியாதிருக்கும். இதன் காரணமாக இக்கலவையை ஆரம்ப நிலப்பண்படுத்தலின் போது வயலில் இட்டு மண்ணுடன் கலந்து விடுவதன் மூலம் மேற்குறிப்பிட்ட பிரச்சினையை ஓரளவுக்குக் குறைக்கலாம்.

நைதரசன் பயிரின் பதிய வளர்ச்சிக்கு முக்கியமான ஒரு கூறாகும். அத்துடன் இது அதிக எண்ணிக்கையில் வினைத்திறனான, வீரியமான மட்டங்கள் தோன்றுவதையும் தூண்டுகின்றது. நெற்பயிர் முளைத்ததில் இருந்து 15-20 நாட்கள் அளவில் நைதரசன் வளமாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ள ஆரம்பிக்கலாம். நெற்பயிரின் பதிய வளர்ச்சிக்காலத்தில் அக் காலத்தின் அளவைப் பொறுத்து இடப்படும் வளமாக்கிகளை ஓரிரு தடவைகளில் இடாமல் சிறுசிறு கூறுகளாகப் பிரித்துப் பல தடவைகளில் பிரயோகிப்பதன் மூலம் மண்ணில் ஏற்படவிருக்கும் நைதரசனின் தேவையற்ற இழப்பைக் குறைத்து இடப்படும் வளமாக்கியின் பெரும்பகுதியைப் பயிரினால் உள்ளெடுக்கச் செய்யலாம். இதைவிட நெல்வயலில் நிற்கும் நீரின் அளவு குறைவான வேளைகளில் வளமாக்கிப்பிரயோகத்தை மேற்கொள்வதன் மூலம் நைதரசன் மூலக்கூறுகள் நீருடன் சேர்ந்து கசிதல், உட்செல்லுகை, தாழ்வான உட்செல்லுகை என்பவற்றினூடாக வீண் இழப்புக்குள்ளாவதைத் தடுக்க முடியும். அத்துடன் நெல்வயலில் இடப்படும் நைதரசன் வளமாக்கித் துணிக்கைகளை சேற்றினுள் செலுத்துவதற்கான எந்தவிதமான செயல்முறையும் வளமாக்கியின் வினைத்திறனை அதிகரிக்க ஏதுவாகும்.

நெற்பயிரில் குடலை உருவாக்கம் நடைபெறும் காலம் அதன் விளைவைத் தீர்மானிக்கின்ற பிரதான காலப் பகுதியாகும். இக்காலப்பகுதியில் பயிருக்குக் கிடைக்கின்ற, பயிரில் உள்ள, பயிரினால் உற்பத்தி செய்யப்படுகின்ற போசனைக் கூறுகளின் அளவிலேயே நெற்கதிரில் உருவாக்கப்பட நெற்பூக்களின் எண்ணிக்கை தங்கியுள்ளது. பொதுவாக எல்லா நெல்லினங்களிலும் அறுவடைக்கு 2 மாதங்களுக்கு முன்னரே குடலை உருவாக்கம் நடைபெறும். உதாரணமாக ஒரு 5 மாத வயதுடைய நெல்லினத்தை எடுத்தால் அதன் கடைசி ஒரு மாத காலத்தில் முதிர்ச்சி நிகழும். அதற்கு முந்திய ஒரு மாத காலத்தில் இனப்பெருக்க வளர்ச்சி நிகழும். இந்த இனப்பெருக்க வளர்ச்சி ஆரம்பமாகும் காலமே குடலை உருவாகும் காலமாகும். எனவே இவ்வயதுடைய நெல்லினங்களில் பயிர் முளைத்ததில் இருந்து மூன்று மாதங்களில் (90 நாளில்) குடலை உருவாக்கம் நடைபெறும். மேற்குறிப்பிட்ட கருத்துக்களைக் கவனத்திற்கொண்டு சரியான இக்காலப்பகுதியைக் கண்டுபிடித்து இதற்கு சற்று முதலாக இறுதி வளமாக்கியான **(TDM)** கலவையை (இது நைதரசன், பொட்டாசு என்பவற்றைக் கொண்டது) இடுவதன் மூலம் ஒரு கதிரில் உருவாக இருக்கும் நெற்பூக்களின் எண்ணிக்கையை அதிகரித்து விளைவைக் கூட்ட முடியும். இக்கலவை மூலம் வழங்கப்படும் நைதரசன் கதிர் உருவாக்கத்தின் போதும் அதன் பின்னரும் ஒவ்வோர் தண்டிலும் தொழிற்படு நிலையிலுள்ள இலைகளை நீண்ட நாட்களுக்குப் பச்சையாகவும் ஒளித்தொகுப்புச் செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவையாகவும் இருப்பதற்கு வழி வகுக்கும். இப்பயிரைப் பொறுத்த மட்டில் விளைவின் 60% ஆன பங்கு பயிரில் நெற்கதிரின் தோற்றத்துக்குப்பின் நடைபெறும் ஒளித்தொகுப்பிலேயே தங்கியுள்ளது. அதனிலும் குறிப்பாக **Flag leaf** எனப்படும் கடைசியாகத் தோன்றும் இலையே அதிகளவு ஒளித்தொகுப்பு விளைபொருட்களை உற்பத்தி செய்யும் ஆற்றல் உள்ளதாகக் காணப்படுகின்றது. எனவே இவ் இலைகளை அதிக நாட்களுக்குப் பச்சையாக வைத்திருக்க வேண்டியது அவசியமான ஒரு தேவையாகும். பொட்டாசியமானது பயிரின் இலைகளிலிருந்து நேரடியாகவும், தண்டின் சேமிப்புக்களில் இருந்தும் ஒளித்தொகுப்பு விளைபொருட்கள் கதிருக்குக் கடத்தப்படுவதைத் தூண்டுகின்றது. மேற்குறித்த செயற்பாடுகள் மூலம் ஒரு நெற்கதிரில் உள்ள எல்லா நெற்பூக்களும் முழுநிரம்பல் அடைந்த நெல்மணிகளாக உருவாக்கப்பட வாய்ப்பேற் படுகிறது.

யூரியாவுக்குப் பதிலாக அமோனியம் சல்பேற் பாவிக்கப்பட்டால் யூரியாவின் அளவினது இரு மடங்கு பாவிக்கப்பட வேண்டும். பழைய நெல்லினங்களுக்கு மேற் குறிப்பிட்ட அளவை விடக் குறைந்த அளவில் பாவிப்பது நன்று. ஏனெனில் இவை பொதுவாக நீண்ட நலிவான தண்டுகளைக் கொண்டவை இவற்றில் அதிகரித்த நைதரசன் நிலைமைகளில் மிகக் கூடுதலான தண்டு நீட்சி நிகழ்வதனால் கதிர் உருவாக்கத்தின் பின்னர் பயிர் நிலத்தில் சரிய வேண்டிய நிலைமை ஏற்படும். இது விளைவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு செயற்பாடாகும்.

**எஸ். சத்தியசீலன்,**
**B.Sc (Hons) in Agri**
**வெளிக்கள உதவியாளர் ,**
**யு.என்.எச்.சி.ஆர்.,**
**யாழ்ப்பாணம்.**
**நேர்காணல் கனகபுரச் சோதி**

# புலிகளின் இடைக்கால தன்னாட்சி அ.சபையை கூட்டாக எதிர்ப்பதென சி.சு.கட்சி, ஜே.வி.பி.முடிவு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் முன் வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பிரேரணைகளுக்கு ஏற்ப அரசு நடந்து கொள்ளுமாயின் அதனைக் கூட்டாக எதிர்ப்பதாக ஜே.வி.பி. சிறில சு.கட்சிகள் உடன்பட்டுள்ளன. கடந்த 2ஆம் திகதி சனாதிபதி மாளிகையில் இருகட்சிகளும் இந்த உடன்பாட்டுக்கு வந்துள்ளன. அத்துடன் இது தொடர்பாக வரும் காலங்களில் தோன்றவுள்ள நிலைமைகள் பற்றி உடனுக்குடன் ஆராயவும் முடிவெடுக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இரு கட்சிகளினதும் தனியான கருத்துக்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் மேலாக இவ்வாறான கூட்டு நடவடிக்கை எடுப்பது பற்றித் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சந்திரிகாவின் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது ஜே.வி.பி.சார்பில் விமல் வீரவன்ச, அனுரதிசாநாயக்க ஆகியோரும் சிறில.சு.க. சார்பில் மைத்திரிபால சிறிசேனவும் எதிர்க்கட்சி சார்பில் மங்களசமர வீரவும் கலந்து கொண்டனர்.

# தமிழ் பத்திரிகை நிறுவன வான் கொழும்பில் கடத்தல்

கொழும்பு ஆமர் வீதியில் கடந்த திங்கட் கிழமை மாலை தமிழ்ப் பத்திரிகை நிறுவனமொன்றின் வாகனம் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

ஆட்டோவில் கைத்துப்பாக்கி, கத்திகள் ஆகியவற்றுடன் வந்த 05 பேர்கொண்டகுழுவினர் வானில் சாரதியைத் தாக்கிவிட்டு வானைக்கடத்திச் சென்றுள்ளதாக கொட்டாஞ்சேனைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குழுவினர் வந்ததாகக் கருதப்படும் ஆட்டோச் சாரதி, காயங்களுடன் கிடந்த வான் சாரதியைப் பொலிஸ்நிலையம் செல்வதாகத் தனது ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு வேறு வழியில் சென்றுள்ளார். இதன் மூலம் வான் சாரதி பொலிஸ் நிலையம் செல்வதைத் தடைசெய்யமுயற்சித்துள்ளார்.

ஆனால் தான் ஏமாற்றப்பட்டு அழைத்துச் செல்லப்படுவதை அறிந்த வான் சாரதி அங்கு ஆட்டோவிலிருந்து பாய்ந்து பின்னர் ஆமர் வீதிப் பொலிஸ் காவல் நிலையத்தில் முறையீடு செய்துள்ளார். 15 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த வான் கடத்தல் தொடர்பாக கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழு விசாரணையிலும் தேடுதலிலும் ஈடுபட்டுள்ளது.

# இடைக்கால நிர்வாகத்தை எதிர்த்து தேசாபிமானிகள் அமைப்பு ஆர்ப்பாட்டம்

**தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக பரிந்துரையை எதிர்த்து தேசாபிமானிகள் தேசிய அமைப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளது.**

எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்பு நகர சபை மைதானத்தில் இந்த அமைப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நேற்றுமுன்தினம் கொழும்பில் ஊடக மாநாடு ஒன்று நடத்தப்பட்டு இதில் கருத்துரைத்த ஏற்பாட்டாளர்கள், நிகழ்வு தினத்தில் நாட்டின் அனைத்து வீடுகளிலும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட வேண்டும். அத்துடன் கொழும்புக்கு வரும் வாகனங்களில் தேசியக் கொடிகள் பறக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை விடுத்துள்ளனர்.

இந்த ஊடக மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, அர்ஜுன ரணதுங்க, எல்லே குணவன்ச தேரர், தபர அமிய தேரர் ஆகியோர் பங்கேற்றனர்.

# ஸ்ரான்லி வீதிக் காவலரண்கள் பலப்படுத்தப்படுகின்றன

(வடமராட்சி)

யாழ்.நகரின் ஸ்ரான்லி வீதிப் பகுதியிலுள்ள இராணுவ காவலரண்களைப் படையினர் மீண்டும் புதுப்பிக்க ஆரம்பித்துள்ளனர்.

ஸ்ரான்லி வீதி-மணிக்கூட்டுக் கோபுர வீதி சந்திப் பகுதியில் 512 ஆவது இராணுவப் படைப் பிரிவின் நகர முகாமின் நுழைவாயிலில் உள்ள பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்தும் பணியிலேயே படையினர் நேற்றுமுன்தினம் முழுவதும் ஈடுபட்டிருந்தனர்.

படை உயர் அதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பில் சுமார் 20 இற்கும் அதிகமான படையினர்,முன்னர் அமைக்கப்பட்டிருந்த காவலரண்களை அகற்றிப் புதிதாகக் காவலரண்களை அமைக்கும் பணியில் நேற்றிரவு வரை ஈடுபட்டிருந்தனர்.

1996 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டது முதல், யாழ்.நகரின் மையப் பகுதியான விக்டோரியா வீதி,மணிக்கூட்டுக் கோபுரவீதி மற்றும் மின்சார நிலைய வீதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் படைத்தளமொன்றை அமைத்துப் படையினர் நிலைகொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (27)

# பெற்றோல் தட்டுப்பாடு விரைவில் நீக்கப்படும்

## கிளி.அரச அதிபர் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிமாவட்டத்தில் குறிப்பாக கிளி.நகரத்தில் ஏற்பட்டுள்ள எரிபொருள் (பெற்றோல்)க்கு ஏற்பட்டுள்ள கட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்வதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென கிளி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டசெயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுகாதாரக் குழுக்கூட்டத்தில் அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

இன்னும் ஓரிரு தினங்களில் கிளிநொச்சி நகரப்பகுதிக்கு பெற்றோல் எடுத்துவரப்பட்டு இங்கு நிலவிய தட்டுப்பாடு நீங்குவதற்கு நடவடிக்கைமேற்கொள்ளப்படுமென அரச அதிபர் தி. இராசநாயகம் மேற்படி கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (சோ)

# புற்று நோய் வைத்தியசாலைக்கு மின்வழங்கப் படையினர் தடை!

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு, மின் வழங்கும் நடவடிக்கை தொடர்பாக மின்சார சபை படைத்தரப்பிடம் விடுத்த கோரிக்கைக்குப் படைத்தரப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது.

இவ்வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் கதிர்ச்சிகிச்சை மற்றும் சத்திரசிகிச்சை போன்றவற்றிற்கான உயர் அழுத்தமின் வழங்கலின் அவசியத்தைக் கருத்திற்கொண்டு வைத்தியசாலை வட்டாரங்கள் விடுத்த கோரிக்கைக்கிணங்க மின்சார சபை அதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டபோதும் மேற்படி வைத்தியசாலைபலாலிப் படைத்தளத்தின் பாதுகாப்புவலயப் பிரதேசத்துள் அமைந்திருப்பதனால் அதனுள் பிரவேசித்து மின் விநியோகப் பணிகளைச் செய்வதற்கு மின்சாரசபைகோரியும் அனுமதிக்க படையினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.இதனால் சிகிச்சைகள் பாதிப்படைந்து வருகின்றன. (33)

# காலை வீட்டிலிருந்து புறப்பட்டவர் மதியம் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நேற்று மதியம் ஆணர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி கிழக்கு காளி கோவிலடியைச் சேர்ந்த வி.சந்திரகுமார் (வயது-46) என்பவரது சடலமே மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்காலை இவர் வீட்டிலிருந்து நகரிற்குப் புறப்பட்டுச் சென்றிருந்ததாக இவரது உறவினர் தெரிவித்துள்ளனர். இவரது பிடரிப் பகுதியில் காயம் இருப்பதையிட்டு விசாரணையை சிறீலங்காப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர். (33)

# அச்சுவேலி படைமுகாமில் கலகம் அடக்கும் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் படைமுகாமிலுள்ள படையினர் கலகம் அடக்கும் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக மேற்படி முகாமின் முன்பாக வீதி ஓரமாக மாலை வேளைகளில் படையினர் இப் பயிற்சிகளில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகிறது.

இதன்போது படையினர் இரு குழுக்களாகப் பிரிந்து ஒரு குழு கலகம் உருவாக்குபவர்கள் போலவும் மறு குழு அதை அடக்குபவர்கள் போலவும் மாறிமாறி பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. பெரும் கூச்சல்களுடன், படையினர் செய்யும் இந்த நடவடிக்கையால் மக்களிடையே பரபரப்பு நிலவியுள்ளது. (33)

# வீடமைப்புக் கடனுதவி

கிளிநொச்சி மாவட்டத்திற்கான வீடமைப்புக் கடனுதவிகளை வழங்குவதற்குப் புனர்வாழ்வு அமைச்சு 100மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகப் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது புனர்வாழ்வு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளூடாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (33)

# கிளி.இல் தொற்றுநோய்பற்றி விழிப்புணர்வுக்கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

டெங்கு மற்றும் தொற்று நோய்கள் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் வரும் 13 ஆம் திகதியன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மற்றும் மலேரியாத் தடுப்புப் பிரிவினர் இணைந்து கிளிநொச்சியிலுள்ள அரச திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் மேற்படி விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேற்கொள்ளவுள்ளனர். மற்றும் வியாபார நிலையங்களில் பரிசோதனைகளையும் மேற்கொள்ளவுள்ளனரெனகிளிநொச்சிசுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சுஜந்தன் தெரிவித்துள்ளார்.(சோ)

# சைவநெறித் தேர்வு சனிக்கிழமை நடைபெறும்

சைவபரிபாலனசபையினரால் நடத்தப்படும் சைவநெறி தேர்வு 8-11.2003 சனிக்கிழமைநடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்,வவுனியா, சிலாபம் ஆகிய மாவட்டங்களில் 422 தேர்வு நிலையங்களில் 82000 மாணவர்கள் தேர்வுக்குத் தோற்றுவார்கள்.தேர்வுக்கு விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு அட்டவணை இணைப்பிரதி என்பன அனுப்பப்பட்டுள்ளது. இப்பரீட்சைக்கு 30 இணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

தரம்-12 மாணவர்களுக்கு இந்து நாகரிகம் இந்துசமயம் ஆகிய பாடங்களில் தேர்வு நடைபெறும் என. தேர்வுச் செயலர் வ. கந்தசாமி அறிவித் துள்ளார்.

# நெல் உயர் விளைச்சலைப்பெற நாகசல்பேற்று பயன்படுத்துக

நெற்செய்கையில் உயர் விளைச்சலைப் பெறுவதற்கு சுவட்டு மூலகங்களில் ஒன்றான நாகத்தை நெல்வயலில் பயன்படுத்துவதால், உயர் விளைச்சலைப் பெறலாமென இலங்கை விவசாயத்திணைக்களம் சிபார்சு செய்துள்ளது. இதற்கமைய ஏக்கர் ஒன்றிற்கு இரண்டு கிலோகிராம் நாகசல்பேற்றை அடிபுரமாகப் பாவிக்க வேண்டும். நாகசல்பேற் ஒரு கிலோகிராம் பக்கற் ரூபா47.50 அதத்திற்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள வன்னிவேளாண்தொழில் நுட்ப நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம் என கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) திருமதி ஜீ. ஆனந்தராசா அவர்கள் தெரிவிக்கின்றார்.

# வரவுசெலவுத் திட்டத்தை 12 ஆம் திகதி சமர்ப்பிக்க முடியாது

(கொழும்பு)

அரசியல் களத்தில் ஏற்பட்டுள்ள நடைமுறைப் பிரச்சினை காரணமாகவும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதன் காரணமாகவும் வரும் 12 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படமாட்டாது என மத்திய வங்கியின் ஆளுநர் கூறியுள்ளார்.

திட்டமிட்டபடி வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க முடியாதுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (32)

# யாழ்.பழக்கடை வியாபாரியை ஒரு வாரமாகக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பழக்கடை வியாபாரியான தர்மலிங்கம் யோகேஸ்வரன் என்பவர் கடந்த 29 ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளதாக அவரது உறவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 29 ஆம் திகதி கடற்கரைவீதி நாவாந்துறையில் அவரது வீட்டிலிருந்து யாழ்.நகரிற்குப் புறப்பட்ட அவர் காணாமற்போயுள்ளார் என்றும் இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிட்டுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (33)

# மாவீரர் துயிலுமில்லம் முன்பிருந்த வீதித் தடைகள் அகற்றல்

## படையினர், பொலிசார் அடாவடி

(வடமராட்சி)

வேகமாகச் செல்லும் வாகனங்களைக் கட்டுப்படுத்தவென கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக அமைக்கப்பட்டிருந்த வேகத்தடைகளை இரவோடிரவாக படையினரும், பொலிஸாரும்அகற்றியுள்ளதாகக்குற்றஞ் சாட்டப்படுகின்றது.

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவுள்ள "தமிழீழ மாவீரர்தினத்தை" முன்னிட்டு கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லப்பகுதியில் துரிதமாக புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

1996ஆம் ஆண்டு யாழ். குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்ட வேளை, கொடிகாமம் மாவீரர்துயிலுமில்லமும் இராணுவத்தால் முற்றாக இடித்து நிர்மூலமாக்கப்பட்டிருந்தது .

எனினும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் ஏற்பட்டுள்ள சுமுக நிலையை அடுத்து இம்மாவீரர் துயிலும்இல்லம், முன்பிருந்தவாறே துரிதமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களுடன், பொதுமக்களது வாகனங்களும் இப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக உள்ள கொடிகாமம் -பருத்தித்துறை வீதியூடாக பயணிக்கின்ற வாகனங்கள் விபத்துக்குள்ளாவதையடுத்தே இவ் வீதியில் தற்காலிக வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு அப்பகுதியில் குவிக்கப்பட்ட பெருமளவிலான படையினரும் பொலிஸாரும் இணைந்து எந்த வித முன்னறிவித்தலும் மின்றிஇவ் வேகத்தடைகளை அகற்றியுள் ளதாக விடுதலைப்புலிகளின் தென்மராட்சிப் பிரிவு அரசியல்துறையினர் குற்றஞ் சாட்டியுள்ளனர். (27)


## சேரன் வாணிபம்

## பணிநிலை வெற்றிடம்

**01. பணிநிலை** :- எழுதுநர் பயிலுநர் [ஆண்]

**தகைமைகள்** :- தமிழ்,கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன்,ஆறுபாடங்களில் சித்தி அடைந்திருத்தல்வேண்டும்.

**அகவை** :- 20 - 30 அகவை உடையவராக இருத்தல் வேண்டும்.

**கொடுப்பனவு** :- பயிற்சிக்காலத்தில்ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா2,500/=வழங்கப்படும்.

**பயிற்சிக்காலம்** :- மூன்று மாதங்கள்

**02. பணிநிலை** :- வெதுப்பக உற்பத்தியாளர் பயிலுநர் [ஆண்]
- புதிய தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட்ட முறைகளில் பயிற்சிகள் வழங்கப்படும்.

**தகைமைகள்** :- தமிழ்,விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி அடைந்திருத்தல்வேண்டும்.

**அகவை** :- 20 - 30 அகவை உடையவராக இருத்தல்வேண்டும்.

**கொடுப்பனவு** :- பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா. 2,000/= வழங்கப்படுவதுடன்,தங்குமிட வசதியும் ஒழுங்குசெய்யப்படும்.

**பயிற்சிக்காலம்** :- ஆறு மாதங்கள்.

விண்ணப்பதாரிகள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட, தனி விபரங்கள் அடங்கிய படிவத்தில் பூர்த்தி செய்து 2003.11.12ஆம் நாள் புதன்கிழமைக்கு முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு தபாலிலோ அல்லது பணிமனை பணிநேரத்திலோ நேரிலோ அனுப்பி வைக்கப் படல்வேண்டும்.

கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதுநர், வெதுப்பக உற்பத்தியாளர் பயிலுநர் பணிநிலைக்கான விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும்.

(சி 2604)

ஆளுகை,
சேரன் வாணிபம்,
நடுவப்பணிமனை,
யாழ்.வீதி,கிளிநொச்சி.



## சிந்தனைக்கு

சுதந்திரம்தான் மனித வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கின்றது. முழுமையைக் கொடுக்கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 06-11-2003

## எதிர்பார்க்கப்பட்டதே!

சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க அதிரடி நடவடிக்கையாக ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் முக்கிய மூன்று அமைச்சர்களைப்பதவி நீக்கம் செய்துள்ளார். சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கையானது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பினும் இதனை ஒரு அதிர்ச்சிக்குரிய நடவடிக்கை எனக் கொள்ளமுடியாது.

ஏனெனில், சனாதிபதி சந்திரிகாவும் சரி,அவரது பொ.ஐ.முன்னணியும் சரி அடிக்கடி அமைச்சர்கள் பதவி பறிப்புப்பற்றியும்,ஆட்சிக் கவிழ்ப்புப் பற்றியும் பேசியே வந்துள்ளனர். அதிலும் குறிப்பாக சனாதிபதி சந்திரிகா அவரது சகோதரர் அனுரா பண்டாரநாயக்க மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் இது குறித்து அடிக்கடி பிரஸ்தாபித்திருந்தனர்.

இதேவேளை அரசாங்கத்தரப்பாலும் இது எதிர்பார்க்கப்படாத தொன்றாக இல்லை. தமது அரசாங்கத்தில் இருந்து முக்கிய மூன்று அமைச்சர்களைப் பதவிநீக்கம் செய்தபோதும், பிரதம மந்திரி ரணில் விக்கிரம சிங்க தனது அமெரிக்க பயண முயற்சி நிரலில் எந்தவிதமாற்றத்தையும் செய்யாமையும், உடன் நாடுதிரும்புவதற்கு எத்தனிக்காமையில் இருந்துமே இதனைப் புரிந்து கொள்ள முடியும். அதாவது சனாதிபதியின் இத்தகையதொரு நடவடிக்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் எதிர்பார்க்கப்பட்டதொன்றாகவே இருந்துள்ளது.

ஆகையினால், அமைச்சர்கள் பதவி நீக்கமோ அன்றி பாராளுமன்றத்தை இடை நிறுத்தியுள்ளமையோ இங்கு முக்கியத்துவம் வாய்ந்ததொன்றல்ல. ஆனால், சனாதிபதி சந்திரிகா இதற்கெனத் தேர்ந்தெடுத்துள்ள காலமே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதாவது, அரசியல் ரீதியான மாற்றங்களுக்கு நாடு தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில் இவ் ஆட்சிக் கவிழ்ப்புக் குறித்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் தற்பொழுது விடுதலைப்புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான நகல் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளனர். இத்திட்டம் குறித்து அபிப்பிராய பேதங்கள் காணப்படுகின்றபோதும் அரசாங்கம் தற்பொழுது பேச்சுவார்த்தைக்குத் தயாராகி வரும் நிலையில் இவ் அமைச்சர்களின் பதவி நீக்கம் இடம்பெற்றுள்ளது.

அடுத்ததாக, இப்பதவி நீக்கமானது பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க – வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கையில் – அதிலும் குறிப்பாக, அமெரிக்காவிற்கான பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கையில் இவ் அமைச்சர்கள் பதவி நீக்கம் இடம்பெற்றுள்ளது. இவ்விரண்டு அம்சங்களும் எத்தகைய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது சனாதிபதி சந்திரிகாவிற்கும் தெரியாததொன்றல்ல.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகாவின். இந்நடவடிக்கையானது நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதொன்று என்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. இதேவேளை, தனது நடவடிக்கை மூலம் சனாதிபதி சந்திரிகா அமெரிக்கா உள்ளிட்ட அனைவருக்கும் சில விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளார் என்று கூடக் கூறலாம். குறிப்பாக, மேற்குலக நாடுகளின் அபிப்பிராயங்களுக்கு முற்றாக தான் செவிசாய்க்கப்போவதில்லை என்ற சமிக்ஞைகளை வெளிக்காட்டியுள்ளார் எனக் கூறலாம்.

சனாதிபதி சந்திரிகா அமைச்சர்களின் பதவி பறிப்பின் பின்னான தனது தொலைக்காட்சி உரையில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தான் தயாராக இருப்பதாகவும், சமாதான முயற்சிகள் கைவிடப்படமாட்டாது என்ற ரீதியிலும் பேசியிருப்பினும் அது எத்தனை தூரம் சாத்தியமாகும் என்பது கேள்விக்குரியதொன்றே ஆகும். அதாவது, சனாதிபதி அமைச்சர்களின் பதவி பறிப்பிற்குத் தேசிய பாதுகாப்புக் குறித்த கவலையே காரணம் எனத் தெரிவித்திருப்பினும், இது சமாதான முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கையாகவே அனைவராலும் பார்க்கப்படுகின்றது. சர்வதேச உலகமும் இவ்வாறே நம்புகின்றது.

அடுத்ததாக பிரதமர் ரணில் அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையிலும், அமெரிக்கா விடுதலைப்புலிகள் முன்வைத்த திட்டவரைவை வரவேற்றுள்ள நிலையிலும், சனாதிபதி அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கை மேற்கொண்டமையானது அமெரிக்காவின், மேற்குலகத்தினரின் நிலைப்பாட்டை முழு அளவில் ஏற்கும் நிலையில் இல்லை என்பதை வெளிப்படுத்தும் நடவடிக்கையாகவுமே கொள்ளத்தக்கதாகும்.

இந்த வகையில் பார்க்கையில் சனாதிபதியின் நடவடிக்கையின் பின்புறத்தில் வேறு பலமான சக்திகள் உள்ளனவா என்ற கேள்வியைத் தோற்றுவிப்பதாகவுள்ளது. ஏனெனில், மேற்குலகத்தைப் புறக்கணிப்பது போன்றதொரு நடவடிக்கையானது சிறிலங்கா போன்ற சிறிய நாடுகளில் மேற்கொள்ளத்தக்க தொன்றல்ல.

இதேவேளை சனாதிபதி சந்திரிகா இவ் அமைச்சரவைப் பறிப்பு விவகாரம், சமாதான முயற்சிகளைப் பாதிக்காது என்றோ, யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் என்றோ எதைக் கூறினும், அவரின் நடவடிக்கையானது சமாதான முயற்சிகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். முதலாவதாக இவ் அமைச்சுப் பறிப்பின் மூலம் சமாதான முயற்சிகள் இரண்டாம் பட்சமாகி, அதிகாரத்திற்கானப் போட்டி முதன்மையானதாகியுள்ளது. அடுத்ததாக, அதிகாரச் சூழல் ஏற்படுத்திய மாற்றம் சமாதானச் சூழலிலும் மாற்றத்தைத் தோற்றுவிப்பதனால் , சமாதான முயற்சிகள் உடன் தொடரப்படுவதென்பதோ, முன்னைய இடத்திலிருந்து தொடங்கப் படுவதோ சாத்தியமற்றதொன்றாகும். ஒட்டுமொத்தத்தில் சமாதான முயற்சிகளை சந்திரிகாவின் நடவடிக்கைகள் பின்தள்ளிவிட்டதெனலாம்.

### -புலிகளின் திட்டவரைவு குறித்து-

# சனாதிபதி சந்திரிகா வாஜ்பாயுடன் பேச முடிவு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக் காலத் தீர்வுத்திட்டம் தொடர்பில் இலங்கையின் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்திய பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயை சந்தித்து கலந்துரையாடவிருக்கி றார். இந்தச் சந்திப்பு எதிர்வரும் 8 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளுக்கு இடையில் இடம்பெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தீர்வுதிட்டத்தில் இடம் பெற்றுள்ள பாதுகாப்பு உட்பட்ட சில முரண்பாடான ஏற்பாடுகள் குறித்து இந்தச் சந்திப்பில் பேசப்படவிருப்ப தாக சனாதிபதியின் செயலகம் ஹரீம்பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய ஒத்துழைப்பு நாடுகளின் தலைவர்களின் மாநாடு புதுடில்லியில் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை நடைபெறவிருப்பதாகவும் இதன்போதே சனாதிபதி இந்தியப் பிரதமரை சந்திக் கவுள்ளார்.

# குமுதினிப் படுகொலை நினைவாலயத்தில் நிரந்தர முகாமமைக்க படையினர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மாவலித்துறை முகத்தில் உள்ள குமுதினிப் படகுப் படுகொலை நினைவாலயத்தில் தற்காலிகமாகத் தங்கியிருந்த படையினர் அதில் நிரந்தரமாகத் தங்கிவிடுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

1985 ஆம் ஆண்டு நடைபெற்ற இனவெறியர்களின் வெறியாட்டத் திற்குப் பலியான அப்பாவி மக்களின் நினைவாக நெடுந்தீவில் உள்ள மேற்படி நினைவர்லயத்தில் தற்போது தங்கியுள்ள படையினர் அதனைச் சூழத் தமது பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்தி வருவதுடன் அங்கு இராணுவ தளபாடங் களையும் கொண்டு வந்து சேர்த்து அங்கு நிரந்தரமாகத் தங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதால் இது குறித்து அப்பகுதி வாழ் மக்கள் எதிர்ப்பினைக் காட்டி வருகின்றனர். (33)

# புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்கும் அறிகுறி ஏதும் தென்படவில்லை

### -பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்தத்திற்குத் தயாராகும் அறி குறிகள் ஏதும் காணப்படவில்லை என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். அரசாங்கம் இந்த விடயம் குறித்து ஆயுதப்படை அதிகாரிகளுடன் உரையாடியிருப்ப தாகவும் அவர் எந்தவொரு நிலைமையை எதிர்கொள்ளத் தயார் என்றும் அவர் கூறினார். தமிழீழ விடுதலைப்புலிகளினால் சமர்ப்பிக் கப்பட்டுள்ள பிரேரணைகள் வரலாற்றில் முதற் தடவையாக அந்த இயக்கம் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கத் தயாராக இருப்பதை புலப்படுத்துவதாகப் பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

# சிறி.அரசியல் குழந்தைப்பிள்ளை விளையாட்டு எமது அணியை அனுப்ப யோசிக்கிறோம்

### இங்கிலாந்து வேல்ஸ் கிரிக்கெட் சபைப் பணிப்பாளர்

(கொழும்பு)

சிறிலங்காவில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை காரணமாக இம்மாதம் சிறிலங்காவுக்கு வருகை தரவுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சுற்றுப் பயணம் கேள்விக் குறியாகியுள்ளது.

இம்மாதம் 13 ஆம் திகதி வருகை தரவிருக்கும் அவ்வணி 3 ஒருநாள் போட்டிகளிலும் 3 டெஸ்ட் தொடரிலும் கலந்து கொள்ளத் திட்டமிட்டிருந்தது. இங்கிலாந்து வேல்ஸ் கிரிக்கெட் சபையின் பணிப் பாளர் ஜோன் ரீட் இது பற்றி கூறும் போது சிறிலங்காவின் அரசியல் குழந்தைப் பிள்ளை விளையாட்டாக இருப்பதாகவும் தமது அணியைத் துணிந்து சிறிலங்காவிற்கு அனுப் புவது பற்றி கூறமுடியாதிருப்பதாகத் தெரிவித்ததுடன் வெளிநாட்டு அமைச்சின் மூலம் நிலைமைகளை அவதானிப்பதாகவும் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக சிறிலங்கா கிரிக்கெட் சபை அதிகாரி தெரிவிக் கும் போது இங்கிலாந்து அணி பாதுகாப்புடன் விளையாடமுடியும் எனவும் அணியை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# சிம்பாவ்வே அணியில் தொடரும் நெருக்கடிகள்

மே. இந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் இருந்து டியான் இப்ராஹிம், கிராண்ட் எவிஸ் இருவரும் நீக்கப்பட்டுள்ளார்கள். சீ எர்வின், டக்லஸ் வேறாண்டோ இருவரும் அணியில் இருந்து காயம் காரணமாக விலகியுள்ளார்கள்.

கிராண்ட் பிளவரின் சகோதரரான அன்டி பிளவர் ஹென்றி ஒலங்கா, அலிஸ்டர் கம்பல், கைய் விட்டல் ஆகியோர் சமீபகாலத்தில் தான் சிம்பாவ்வே அணியிலிருந்து ஓய்வு பெற்றுள் ளார்கள்.

இந்நிலையில் மே.இந்திய த்தீவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கான சிம்பாவ்வே அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 55 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி யுள்ள ஹீத் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இருந்து சிம் பாவ்வே அணியின் முன்னணி வீரரான கிராண்ட் பிளவர் விலகி யுள்ளார்.

அரசியல் சூழ்நிலைகளா லும் வீரர்கள் தொடர்ந்து ஓய்வு பெற்று வருவதாலும் பவீனமடைந்துள்ள சிம்பாவ்வே அணிக்கு அடுத்ததாக பெரிய அதிர்ச்சி ஒன்று ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் மேற்கிந்திய தீவு அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து சிம்பாவ்வே அணியின் மூத்த வீரரான கிராண்ட் பிளவர் விலகியுள்ளார். இது சிம்பாவ்வே அணிக்கு பெரிய இழப்பாகும். ஸ்ட்ரிக் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இத் தொடரில் விளையாட முடியாதது குறித்து கிராண்ட் பிளவர் கூறுகையில்; எனக்கு ஏற்பட்ட காயம் இன்னும் குணமாகவில்லை. கையில் கட்டுடன்தான் இருக்கின்றேன். எனவே 22 ஆம் திகதி தொடங்கவிருக்கும் ஒரு நாள் போட்டித் தொடரில் விளையாடவுள்ளேன் என்று கூறியுள்ளார்.

# இங்கிலாந்துடனான ஒருநாள் போட்டி பங்களாதேஷ் அணி அறிவிப்பு

இங்கிலாந்து அணியுடனான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது.இப்போட்டிகளுக்கான பங்களாதேஷ் அணிக்கு தொடர்ந்தும் காலித் மஹ்மூத் தலைமை தாங்குகிறார். இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றிய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜாவிட் ஓமர், சுழற்பந்து வீச்சாளர் இனாமுல் ஹக் (ஜுனியர்) ஆகியோர் ஒரு நாள் போட்டிகளுக்குச் சேர்க்கப் படவில்லை.

மிக இளம் வயதில் டெஸ்ட் சதம் குவித்து சாதனை படைத்த மொஹமட் அஷ்ரபுல் தொடர்ந்தும் புறக்கணிக் கப்பட்டுள்ளார். அதேவேளை, முன்னால் அணித்தலைவர் அக்ரம் கானின் மருமகனான நபீஸ் இக்பால் இவ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீரர்கள் விபரம்:- காலித் மஹ்மூத் (தலைவர்) ஹபிபுல் பஸார், காலித் மஸீத், ஹனன் சர்கார், ராஜின் சலாஹ், அலோக் கபாலி, முஸ்பிருர் ரஹ்மான், மொஹமட் ரபீக், தபேஷ் பைஷ்யா, மொஹமட் மொனிருஷ்ஷமான், அன்பர் ஹொஸைன், மொஹமட் ஜமால், நபீஸ் இக்பால் ஆகியோர் ஆவார்கள்.



# சனாதிபதி சந்திரிகாவின் முடிவிற்கு லக்ஷ்மன் கதிர்காமர் விளக்கம்!

(கொழும்பு)

சிறிலங்காவில் மூன்று அமைச்சர்களைப் பதவி நீக்கி அவ் அமைச்சுப் பொறுப்புக்களை சனாதிபதி சந்திரிகா தம்வசம் வைத்திருக்கும் நடவடிக்கைக்குப் பாராளுமன்ற உறுப்பினரும் சனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று விளக்கமளித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டம் நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படுத்துவதாக அவர் சனாதிபதியின் சார்பில் கருத்துக் கூறும் போது தெரிவித்துள்ளார்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் கூட்டம் நேற்றுக் கொழும்பில் நடைபெற்றுள்ளது.

இதில் லக்ஷ்மன் கதிர்காமர்,அனுரா பண்டாரநாயக்கா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டுள்ளார்கள்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய லக்ஷ்மன் கதிர்காமர்:- மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்க சனாதிபதி முடிவு எடுத்தமை நாட்டின் பாதுகாப்புக் கருதியே ஆகும் என்று கூறியுள்ளார்.

திருகோணமலை பாதுகாப்பு விடயம்,விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல் தப்பிச்சென்ற விடயம் என்பனவற்றினால், இறுதியாகப் பாதுகாப்பு அமைச்சை சனாதிபதி பொறுப்பேற்கும் நிலை ஏற்பட்டது. அதேபோல் நாட்டின் உள்துறையில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சனாதிபதி கூறியபோதும், நடவடிக்கைகளை ஜோன் அமரதுங்க எடுக்காமையினால் அதனையும் சனாதிபதி ஏற்றுக் கொண்டதாகவும், தகவல்துறை அமைச்சைப் பொறுப்பேற்பதற்கான உரிய காரணங்கள் எதுவுமில்லை என்றாலும், சில விடயங்களில் தகவல் அமைச்சுப் பிழையான வழிகளில் சென்றுவிடலாம் அதாவது இருக்கும் தற்போதைய நிலைமைகளைப் பொறுத்துத் தகவல்துறை பிழையான வழிக்குச் சென்றுவிடலாம் எனும் அச்சம் காரணமாகவே, அதனையும் சனாதிபதி பொறுப்பேற்றுக்கொண்டதாக அவர் கூறியுள்ளார்.

# ஈ.பி.டி.பி.யினரின் பாதுகாப்பு யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம் ஸ்ரீதர் திரையரங்கில் நிலைகொண்டுள்ள ஈ.பி.டி.பி.யினரின் அலுவலகம் முன்பாக புதியதொரு இராணுவக்காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு கடந்த சிலநாட்களாக அதில் படையினர் காவல் கடமையில் ஈடுபட்டு வருவதை அவதானிக்கமுடிகிறது.

அத்துடன் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் உலாவும் வாகனங்களுக்கு பலத்த இராணுவப் பாதுகாப்பும் வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே. கட்சியினரின் ஆர்ப்பாட்டம் பிரதமர் ரணிலால் நிறுத்தம்

(கொழும்பு)

நேற்றும் இன்றும் ஐ.தே.க. எம்.பி.கள் ஆதரவாளர்களால் பாராளுமன்றத்துக்கு முன்னால் நடத்தத்திட்டமிட்டிருந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தவேண்டாம் என தமது எம்.பி.க்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாஷிங்டனில் இருந்து அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற ஜனநாயகத்தை பாதுகாக்குமாறு கோரி மேற்படி ஆர்ப்பாட்டம் நடாத்த ஆளும்கட்சி எம்.பிக்களால் திட்டமிடப்பட்டிருந்தது. இக் கூட்டங்களையே நடாத்த வேண்டாம் என ஜோன் அமரதுங்கவிற்கு தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டது.

# இருதரப்பு வர்த்தக உறவை மேம்படுத்த அமெ.வர்த்தக பிரதிநிதிகள்-ரணில் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் அமெரிக்காவிற்குமிடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்குப் பிரதமர் ரணிலின் அமெரிக்க விஜயத்தின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க வர்த்தகர்கள் தொடர்பான அமைச்சரவையின் பிரதிநிதி றொபட் செலின் ஆகியோர் இது தொடர்பாக விசேட கலந்துரையாடலை நடத்தியிருக்கிறார்கள்.

அதேசமயம் இலங்கையில் உயிரியல் தொழில்நுட்பத் திட்டமொன்றை ஆரம்பிக்க உதவி செய்வது தொடர்பான உடன்படிக்கை நேற்று வாஷிங்டனில் இரு நாட்டு அதிகாரிகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைக்கும் அமெரிக்காவிற்குமிடையிலான வர்த்தக உறவுகள் பலப்படுத்தப்படுவதற்குத் தமது நாடு உச்சக்கட்ட ஆதரவை வழங்கும் என அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் உறுதி கூறியுள்ளார்.

அமெரிக்காவிற்குச் சென்றுள்ள ரணிலை வாஷிங்டனில் வெளிவிவகாரத் திணைக்களத்தில் சந்தித்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இச் சந்திப்பின் போது இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார விவகாரங்கள் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் என்பன பற்றி ஆராயப்பட்டுள்ளன. இலங்கையில் தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதிகளை அமெரிக்க சந்தைகளில் சந்தைப்படுத்துவது பற்றியும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பில் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, மிலிந்த மொறகொட வெளிவிவகாரச் செயலாளர் பேனாட் குணதிலக அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதுவர் ஆகியோர் பங்குபற்றியுள்ளனர்.

# ஆளும் கூட்டணி பா.உ. க்கள் நேற்றுக் கூடி ஆராய்வு

ஐக்கிய தேசிய முண்ணனியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றுகூடல் நேற்று நடைபெற்றது.

இந்த ஒன்று கூடலில் எந்த நிலையிலும் தாங்கள் தேர்தலுக்குச் செல்லத் தயார் என்றும் அரசுக்கு தமது பெரும்பான்மை ஆதரவு காட்டுவதற்கான சந்தர்ப்பம் இதுவெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதில் 123பேர் இதுவரை ஐக்கிய தேசிய முன்னணியின் பெரும்பான்மையை நிரூபிக்க கையெழுத்திட்டு உள்ளார்கள்.அரசுக்கு பெரும்பான்மையைக் காட்டுவதற்கு சாதாரணமாக 113 உறுப்பினர்கள் மட்டுமே போதுமானது.

நேற்று 4 மணி வரையிலும் இந்த ஒன்றுகூடல் நடைபெற்றது. அதேநேரம் மாலை நான்கு மணிக்குப் பின்னர் விசேட கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

இதில் ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை கொழும்பில் தங்கி இருக்குமாறு தலைமைப் பீடம் பணிப்புரை விடுத்துள்ளது. (32)

## பயிற்சி வகுப்பு

இக்ராட் நிறுவனத்தின் வள அணியினரால் பதிவுசெய்யப் பட்ட அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்குமான சிறப்புப் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 8.11.2003, 09.11.2003 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது.

இதில் நிர்மாணிகள் சங்கத்தில் பதிவுசெய்த அனைத்து ஒப்பந்தக்காரர்களும் கிளிநொச்சியில் அமைந்துள்ள நிர்மாணிகள் சங்கத் தலைமைச் செயலகத்திற்குக் குறித்த திகதிகளில் வந்து பயிற்சி வகுப்பில் தவறாது கலந்துகொள்ளுமாறு நிர் மாணிகள் சங்க நடுவப்பணியகப் பொறுப்பாளர் கேட்டுக் கொள்கிறார். (20)

# சமாதானப் பேச்சுக்களில் தாமதம் ஏற்படாது

## -அமெரிக்கா நம்பிக்கை

சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அரசியல் பதட்டநிலையினால் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில் தாமதம் ஏற்படாதென்று அமெரிக்கா நம்புகிறது. இச் சமாதான முயற்சியை அமெரிக்கா முறைப்படி ஆதரிக்கிறது என்று கூறிய அமெரிக்க தேசிய பாதுகாப்பு மன்றத்தின் செய்தித் தொடர்பாளர் சீயுன் மொஸ்டோமட் சிறிலங்காப் பிரதமரை அமெரிக்க அதிபர் சந்திக்கும் நிகழ்ச்சி திட்டமிட்டப்படி நடைபெறும் என்று கூறினார்.

சிறிலங்கா அரசாங்கம் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தொடங்கியுள்ள முன் முயற்சி தொடரும் என்று புதுடில்லியில் இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள திடீர் அரசியல் நெருக்கடிகளால்அரசியல் சாசன நெருக்கடி எதுவும் ஏற்பட்டுவிடாது என்று இந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன் புதிதாக உருவாகிய சிக்கல்

(லண்டன்)

விடுதலைப்புலிகள் தங்கள் ஆலோசனையை இப்போதுதான் முன்வைத்துள்ளார்கள். பேச்சுவார்த்தைக்கு வரத் தயார் என்றும் கூறியுள்ளார்கள். ஆனால் இப்போது அவசரநிலை என்ற சிக்கல் வந்துவிட்டது. இது தாண்டப்படவேண்டுமென வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கூறினார்.

துருப்புக்கள் விடுதலைப் புலிகளை சமாளிக்க வெளியில் நிலைகொள்ளவல்ல. தென்னிலங்கையில் பிரச்சினை ஏற்பட்டால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக அவச நிலை என்பது பாராளுமன்றத்தில் முன்வைத்து நிறைவேற்றப்பட வேண்டும். அங்கே எங்களுக்குத் தான் இறுதியல் பெரும்பாண்மை உள்ளது. இந் நிலையை சமாளித்த ரணிலின் உத்தி என்னவென கேட்டதற்கு நாடாளுமன்றத்தில் எங்களுக்குத்தான் இறுதிப் பெரும்பாண்மை இருக்கிறது. அதை நாங்கள் தக்க வைத்துக் கொள்வோம். அது மாறாது என்பது எங்கள் நம்பிக்கை. பந்நாட்டுக் கருத்துகள் கூட எங்கள் பக்கம் தான் இருக்கிறதென்பதை சனாதிபதி உணர்ந்து கொள்ளவார் என நினைக்கிறேன் நாம் ஊர் திரும்புவதற்குநிலைமை சீராகும் என்பது எமது கருத்து என்றார் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ.

தற்பொழுது அமெரிக்காவில் இருக்கும் வெளிநாட்டமைச்சர் டிரோன்பெர்னாண்டோ அமைதிப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து நாட்டில் அமைதி இன்மை ஏற்படும் எனக் கவலை தெரிவித்துள்ளார்.

## ஐ.தே...

முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் துரித கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் கையொப்பமிட்டுள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் அதாவுல்லா அணியைச் சேர்ந்த இருவர் கையொப்பம் இடவில்லை என்றும் பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஒருவர் கையொப்பம் இட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கொழும்பு அரசியல் களத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களை தத்தம் பக்கம் இழுக்கும் நோக்கில் பேரம் பேச்சுக்கள் தீவிரமடைந்துள்ளன. (32)

## சனாதி...

விடுதலைப்புலிகள் தயாரித்த திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்கள் நடத்தச் சென்றால் இலங்கையின் இறையாண்மையைகாட்டிக் கொடுப்பதாகவே இருக்கும் என்று அது கூறியுள்ளது.

இதேவேளை இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் சனாதிபதிக்கு அதிகாரம் உண்டு என சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபாலசிறிசேன கூறியுள்ளார். (32)

## ரணில்...

பதிலை வெளிப்படுத்தியிருக்கின்ற வேளையில் அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுப்பதற்கு சனாதிபதியால் எடுக்கப்படுகின்ற முடிவுகள் நிச்சயமாக சமாதான முயற்சிக்கு பெரும் குந்தகத்தை ஏற்படுத்தி சமாதான முயற்சியை கேள்விக்குரிய விடயமாக்கிவிடுமோ எனக் கருதுகிறோம். அதனால் இவ்விதமான விடயங்களில் சனாதிபதியை எடுபட வேண்டாமென்று நாம் உறுதியாகக் கேட்டுள்ளோம்.

சென்ற சனாதிபதித் தேர்தலில் எவ்விதமாக சனாதிபதியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்டாரோ அதேவிதமாக சென்ற பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி ஆசனம் அமைக்கப்பட்டது. இவ்வரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கிறது. தமிழ்கூட்டமைப்பை சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களுடைய பெரும்பான்மைக்கு மேலதிகமாக அவர்களுக்கு ஆதரவு அளிக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

பொதுசன ஐக்கிய முண்ணனி ஆட்சியிலிருந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் 4மாதங்களாக 99ம் ஆண்டு மார்கழிமாதம் தொடக்கம் 2000ம் சித்திரை மாதம் வரையில் தன்னிச்சையாக யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தி நீடித்து வந்தபோது அவர்கள் அதைப் பயன் படுத்தவில்லை. அதற்கு மாறாக 2000ம் ஆண்டு சித்திரை மாதம் விடுதலைப் புலிகளினால் அறிவிக்கப்பட்ட யுத்தநிறுத்தம் முடிவடைந்த அந்தஇரவே பாரிய யுத்தத்தை அறிவித்தது உலகமறிந்த விடயம்.

சனாதிபதியால் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுகப்பட்டதாக அறிகிறோம் உண்மை எனக் கேட்டபோது. அப்படியொரு அழைப்பிதழ் விடவில்லை பத்திரிகை வாயிலாகத்தான் அறிகின்றோம்.ஆனால் சனாதிபதிவாயிலிருந்து எவ்விதமான அழைப்பும் இதுவரை வரவில்லை என தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கூறினார்.

## பாதுகாப்பு...

டைகளின் தளபதி என்ற வகையில் அவற்றைக் கட்டுப்படுத்துவது உள்ளடங்கும் என நீதிமன்றம் கூறுகின்றது.

இவை தொடர்பான ஒழுங்கு விதிகளை வடிவமைக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு மாத்திரமே உரிமையாக்கப்பட்டிருப்பதால் அமுலிலுள்ள ஒழுங்கு விதிகளைத் திருத்தியமைக்கும். சட்டரீதியான அதிகாரம் பாதுகாப்பு அமைச்சருக்குக் கிடையாது. உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சர் மேற்கொண்ட திருத்தங்கள் வலுவிழந்தவையாகவும் செல்லுபடியற்றவையாகவும் ஆகியுள்ளன. என சனாதிபதி செயலகம் அறிக்கை விடுத்துள்ளது.

பாதுகாப்புத் துறைசார் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் சனாதிபதியால் அடுத்த சிரேஷ்ட தரப்பிற்கு பதவி உயர்த்தப்படவில்லையாயின் அவர்கள் ஓய்வு பெறவேண்டியிருக்கும் என்ற விடயம் சார்பாகப் பாதுகாப்பு அமைச்சர் திருத்தங்களைப் பிரயோகித்திருந்தது தெரிந்ததே.

## தண்ணீர்...

கடந்த 5மாதகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபரே இவ்வாறு சிறைச்சாலைதண்ணீர் தொட்டியினுள் இருந்து மீட்கப்பட்டவராவார். மரணம் தொடர்பாக யாழ்.சிறைச்சாலை வட்டாரங்கள் தகவல் தருகையில் சம்பவ தினத்தன்று வழமை போல காலை வேளை முகம் கழுவுவதற்காக தொட்டிக்கு சென்ற போது தவறுதலாக நீருள்விழுந்ததில் மூழ்கிமரணமானதாக தெரிவிக்கின்றது. மேற்படி தொட்டியுள் தவறி விழுவதற்குரிய சாத்தியக்கூறோ அல்லதுமூழ்கி இறக்கக் கூடிய நீர்மட்டமோ இருக்காததால் மரணம் சந்தேகத்துக்கிடமானதாக உள்ளது. பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.